**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் ஐப்பசி திங்கள் 5–ம் நாள்
2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

இடைநிலை மனு எண்.3/2023
இன்
அசல் வழக்கு எண்.37/2023
(CNR.No.TNTR21-000040-2023)

...

C. குப்புசாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

சுப்பிரமணி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 27.09.2024 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் A.வேணுகோபால் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் K. சரவணன், S. சுரேஷ், S. சரண்யா சரவணன், V. ஹரிகிருஷான், V.சதீஷ், N. பிரபுகுமார், V. சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், உரிய வாய்ப்பு அளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

நீதிமன்ற ஆணையர், வட்டார நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்தினை பார்வையிட்டு 'B' அட்டவணைச் சொத்திலுள்ள ஆக்கிரமிப்பு குறித்து மாதிரி வரைபடம் வரைந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுவின் சுருக்கம்:–</u>**

(அ) வழக்கு சொத்தானது ஓட்டுவீடு மற்றும் காலி இடம் ஆகும். வழக்கு சொத்தை 23.03.2009 ம் தேதியிட்டு கிரையம் பெற்று அதுமுதல் அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்தின் அசல் உரிமையாளரான செந்தில்வேல் வழக்கு சொத்தை 22.03.2004 ம் தேதியிட்டு கிரையம் பெற்று அதுமுதல் அவர் அனுபவத்தில் எவ்வித இடையூறும் இல்லாமல் வைத்துள்ளார். வழக்கு சொத்தை கிரையம் பெற்ற நாள்முதல் மனுதாரர் அனுபவத்தில் எவ்வித இடையூறும் இல்லாமல் வைத்துள்ளார். 'A' அட்டவணைச் சொத்தில் ஓட்டுவீடும், 'B' அட்டவணைச் சொத்து காலி இடமுமாக கொள்ளைபுறமாக வைத்து அனுபவித்து வருகிறார்.

(ஆ) மின்னிணைப்பு மனுதாரர் பெயரில் உள்ளது. அசல் கிரைய ஆவணமும் அதன் முன்ஆவணமும், பட்டா, வரி ரசீதுகள் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் ஆவணங்கள் வங்கி கடனுக்காக வைக்கப்பட்டுள்ளதால் அதை நீதிமன்றம் கோரும்போது வாதி தாக்கல் செய்ய தயாராக உள்ளார். 03.06.2022ம் தேதியிட்டு வழக்கு சொத்திற்கு பக்கத்து நிலத்துக்காரரான பிரதிவாதி வழக்கு சொத்தில் அக்கிரம பிரவேசம் செய்து 1 x 51 அடி வடக்கு பக்கம் ஆக்கிரமிப்பு செய்து விட்டார். அதைப் பொறுத்து மனுதாரர் ஆட்சேபணை செய்தபோது, அவரது சட்டவிரோத ஆக்கிரமிப்பை நிறுத்தவில்லை. எனவே, திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்தில் 05.09.2022ல் வழக்கு சொத்தை அளவீடு செய்ய மனுதாரர் மனு செய்தார். 25.10.2022ம் தேதியிட்டு அளவீடு செய்து எல்லைகற்கள் ஊர்பெரியோர்கள், இருதரப்பு முன்னிலையில் ஊன்றப்பட்டது.

(இ) அளவீடு செய்தபோதுதான் பிரதிவாதி கிழமேல் 1 அடி, தென்வடல் 51 அடி ஆக்கிரமிப்பு செய்து சுற்றுசுவர் எழுப்பியுள்ளது தெரிய வந்தது. பிரதிவாதி சுற்றுசுவரை கட்டி முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். அவருக்கு அதில் உரிமையில்லை. எனவே சுற்றுசுவரை இடித்து காலி இடமாக ஒப்படைக்க வேண்டியுள்ளது. நிரந்தர உறுத்துக்கட்டளை மூலமே எதிர்மனுதாரரை நிறுத்த இயலும். அசல் வழக்கு விளம்புகை மற்றும் ஒப்படைப்பு கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் தேவையற்ற சாட்சியங்களை குறைக்க நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வது அவசியமாக உள்ளது. எனவே மனுவை அனுமதிக் வேண்டும்.

2. எதிர்மனுதாரருக்கு உரிய வாய்ப்பு அளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளார்.

3. **தீர்வுக்குரிய பிரச்சனை:–**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. **தீர்வு:–**

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை, ஒப்படைப்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் வடக்கு பக்கம் ஆக்கிரமிப்பு செய்து சுற்றுசுவர் எழுப்பியுள்ளார் என்றும், அதைப் பொறுத்து நீதிமன்றத்திற்கு நிரூபணம் செய்ய ஆணையர் நியமனம் அவசியம் என்றும் மனுவை அனுமதிக்க கோரி வாதிடப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது அசல் வழக்கானது விளம்புகை, ஒப்படைப்பு, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கு சொத்திலுள்ள ஆக்கிரமிப்பை கண்டறிய நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியம் என்ற மனுதாரரின் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வழக்கறிஞர் திருவாளர் S. ராஜா அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் கட்டணமான ரூ.5,000/- ஐ, நீதிமன்ற ஆணையருக்கு இவ்வுத்தரவு தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்து வட்டா நில அளவையர் உதவியுடன் 'B' அட்டவணைச் சொத்தை பார்வையிட்டு, அதிலுள்ள ஆக்கிரமிப்பு குறித்து மாதிரி வரைபடம் வரைந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. அழைக்க நாள் 08.11.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/- R.D. Gurulakshmi
22.10.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

Sd/- R.D. Gurulakshmi
22.10.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.